அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் Provincial Department of Education NWP

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

22 T I

## முதலாந் தவணைப் பரீட்சை– தரம் 12 – 2018
## First Term Test - Grade 12 - 2018

சுட்டெண் : ........................ புவியியல் I Geography I காலம் : 2 மணி


- **இவ்வினாப்பத்திரம் இரு பகுதியைக் கொண்டது.**
- **பகுதி I பல்தேர்வு வினாக்கள் 40 ஐ உள்ளடக்கியது. அதில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **பகுதி II இல் 5 வினாக்களுள்ளன அதில் 1ம் வினா கட்டாயமானது. மிகப் பொருத்தான விடையை தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.**
- **பகுதி II ஆம் III ஆம் பகுதிகளிலிருந்து ஒவ்வொரு வினாவை தெரிவு செய்து விடை எழுதுக.**
- **மொத்தமாக மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.**

## <u>பகுதி I</u>

- **மிகச்சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை முன்னுள்ள அடைப்பினுள் இடுக.**

1. 1:50000 இடவிளக்கப்படங்களில் தரைத்தோற்ற அம்சங்களுக்கு உரித்தான பண்புகளை மட்டும் காட்டும் விடைத்தொகுதியை தெரிவு செய்க.
   1. நடைபாதை, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம், பாடசாலை
   2. ஹோட்டல், வெளிச்சவீடு, பாடசாலை
   3. இடஉயரம், கடற்கரை, சமவுயரக்கோடு
   4. ஹோட்டல், குளம், பாலம்
   5. பங்களா, கற்குழி, மாகாணஎல்லை (.........)

2. கீழே நீர்வடிகாலமைப்பு பாங்குகள் காட்டப்பட்டுள்ளன. அவற்றை சரியான ஒழுங்குமுறைப்படி பெயரிட்டால் வரும் விடையை தெரிவு செய்க.



   1. ஆரை, சட்டத்தட்டு, அளியடைப்பு, மரநிகர்
   2. மரநிகர், கங்கன அளியடைப்பு, ஆரை
   3. கங்கண அளியடைப்பு, மரநிகர், சட்டத்தட்டு
   4. அளியடைப்பு, மரநிகர், ஆரை, கங்கன
   5. சட்டத்தட்டு, கங்கன. அளியடைப்பு, ஆரை (.........)

3. இலங்கையின் 1:50000 இடவிளக்கப்படங்களின் உண்மையான நீள அகலங்களை காட்டும் விடை.
   1. 80cm x 50 cm
   2. 25cm x 40 cm
   3. 20cm x 40cm
   4. 50 cm x 60 cm
   5. 100 cm x 40 cm (.........)

4. மெட்ரிக் தேப்படங்களின் வெளிஎல்லையின் மேல் ஓரத்தில் காட்டப்படும் விடயங்களை மட்டும் காட்டும் விடைத் தொகுதியை தெரிவு செய்க.
   1. படத்தின்பெயர், அளவுத்திட்டம், படத்தின்வகை
   2. தேசியஆள்கூறு, சர்வதேச ஆள்கூறு, திசை
   3. அகலாங்கும் நெட்டாங்கும், அளவுத்திட்டம், திசை
   4. அளவுத்திட்டம், நிர்வாகஎல்லை, படத்தின் வகை
   5. படத்தின் வகை, படத்தின்பெயர், படத்தின் இலக்கம். (.........)


5. படங்கள், வரைபுகள் அளவுகள் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகள் என்பன பயன்படுத்தப்படுவது.
1. மானிடப்புவியியலில் 2. சுற்றாடற் புவியியலில் 3. உயிர்கோள தொழிநுட்பத்தில்
4. செய்முறைப் புவியியலில் 5. சனத்தொகை புவியியலில் (.........)

6. 1:50000 மெற்றிக் தேசப்படங்களில் ஒரு பகுதியை இருமடங்காக பெருப்பிக்கும் போது அதன் புதிய அளவுத்திட்டம் எது?
1. 1: 10,000 2. 1: 5,000 3. 1: 100,000 4. 1: 75,000 5. 1: 25,000 (.........)

7. சமவுயரக்கோடுகள் தாழ்பிரதேசத்தில் ஐதாகவும் உயர்பிரதேசத்தில் நெருக்கமாகவும் காணப்படுதல் அது எவ்வகையான சாய்வாகும்?
1. மென்சாய்வு 2. ஓங்கல் சாய்வு 3. குழிவுச்சாய்வு
4. குத்துச்சாய்வு 5. குவிவுச்சாய்வு (.........)

8. பண்பாட்டு அம்சத்தையும், பௌதீக அம்சத்தையும் ஒரே நேரத்தில் காட்டக் கூடிய படவகையை காட்டும் விடையை தெரிவு செய்க.
1. இடவிளக்கப்படம் 2. காலநிலைப்படம் 3. சிறப்புப்படம்
4. அளவிடைப்படம் 5. சனத்தொகைப்படம் (.........)

9. இடவிளக்கப்படங்ளில் காணப்படும் தரைத்தோற்ற அம்சமொன்றின் படம் இங்கு காட்டப்பட்டுள்ளது. இங்கு X எழுத்தால் காட்டப்படும் இடத்தின் தரைத்தோற்ற அம்சம் யாது?
1. பள்ளத்தாக்கு 2. கணவாய் 3. சுவடு
4. மேட்டுநிலம் 5. நீர்வீழ்ச்சி (.........)




10. ஆள்கூறு அளியடைப்பை தயாரிக்கும் போது பிதுருதலாகல உச்சியிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருந்து ஆரம்பம் பெறுமானம் பெற்றப்படுகின்றது.
1. பிதுருதலாகலயிலிருந்து 250km வடக்கிலிருந்து 250 Km கிழக்கிலிருந்து
2. பிதுருதலாகலயிலிருந்து 400km கிழக்கிலிருந்து 250 Km தெற்கிலிருந்து
3. பிதுருதலாகலயிலிருந்து 250km வடக்கிலிருந்து 250 Km தெற்கிலிருந்து
4. பிதுருதலாகலயிலிருந்து 500km மேற்கிலிருந்து 250 Km தெற்கிலிருந்து
5. பிதுருதலாகலயிலிருந்து 500km வடமேற்கிலிருந்து 250 Km கிழக்கிலிருந்து (.........)


11. மண்ணின் குறுக்கு வெட்டு முகத்தை அவதானிக்கும் போது உக்கிய கனிப்பொருட்கள் அடங்கிய கருநிறமுடைய வலயத்தைக் கொண்ட மண்படை பின்வருவனவற்றள் எது?
1. A படை 2. B படை 3. C படை 4. A , B படை 5. A , C படை (.........)

12. வளிக்கோளத்தில் உள்ள படைகளில் வெப்பநிலை நிலையாக காணப்படும் வலயம் பின்வருவனவற்றுள் எது?
1. இடைமண்டலமும் மாறன் மண்டலமும். 2. மாறன் மண்டலமும், படைமண்டலமும்
3. இடைத்தரிப்பும், மாறன் தரிப்பும் 4. படைமண்டலமும், இடைமண்டலமும்.
5. படைமண்டலமும், வெப்பமண்டலமும் (.........)

13. மாறன்மண்டலத்தின் மேல் எல்லை பரந்திருப்பது கிட்டத்தட்ட,
1. 20 km – 35 Km இடையில் 2. 08 km – 16 Km இடையில்
3. 50 km – 80 Km இடையில் 4. 20 km – 50 Km இடையில்
5. 10 km – 35 Km இடையில் (.........)

14. பொறிமுறையால் உருவான களிமண் சார்ந்த அடையற்பாறைகள் அடங்கிய விடை பின்வருவனவற்றுள் எது?
1. களி, மணல் 2. மணற்கல், சல்க 3. சுண்ணக்கல், ஜிப்சம்
4. மாக்கல், சேறு 5. டொலமைட், நிலக்கரி (.........)

15. இலங்கையின் பிரதான பாறை வலயத்தை காட்டும் படத்தில் B மற்றும் C இனால் காட்டப்பட்டுள்ள வலயமாவது,




1. B – கடுகண்ணாவ வலயம் C – விஜயன் தொகுதி
2. B – மயோசிக் சுண்ணக்கல் வலயம் C – உயர்நிலத்தொடர்
3. B – கதிர்காம வலயம் C – தப்போவ வலயம்
4. B – உயர்நிலத்தொடர C – விஜயன் தொகுதி
5. B – வன்னித்தொகுதி C – உயர்நிலத்தொடர் (.........)

16. சிலிக்கன், பீட், களி போன்ற கனியங்கள் அடங்கும் பிரதான கனியப்பிரிவு
1. உலோகக்கனியம், உலோகமல்லாதகனியம், எரிபொருள்கனியம்
2. எரிபொருள் கனியம், உலோகமல்லாத கனியம், உலோகக்கனியம்
3. உலோகக்கனியம், எரிபொருள் கனியம், உலோகமல்லாத கனியம்
4. எரிபொருள் கனியம், உலோகக்கனியம், உலோகமல்லாத கனியம்.
5. உலோகமல்லாத கனியம், உலோகக்கனியம், எரிபொருள் கனியம் (.........)

17. உயரச் செல்லச் செல்ல வெப்பநிலை அதிகரித்துச் செல்லும் வளிமண்டலப்படைகள் இரண்டையும் காட்டும் விடையை தெரிவு செய்க.
1. மாறன் மண்டலமும், படை மண்டலமும் 2. படைமண்டலமும், இடைமண்டலமும்
3. இடை மண்டலமும், வெப்ப மண்டலமும் 4. வெப்பமண்டலமு், மாறன் மண்டலமும்
5. படைமண்டலமும். வெப்ப மண்டலமும் (.........)

18. உருமாறிய மற்றும் அடையற் பாறைகளுக்குரிய உதாரணங்களை ஒழுங்குமுறையாக காட்டும் விடையை தெரிவு செய்க.
1. சலவைக்கல், சுண்ணாம்புக்கல் 2. பொசோல்ட், கிரனைட் 3. களி, மண்
4. கிரனைட், மாணிக்கம் 5. பீட், நிலக்கரி (.........)

19. புவியின் வளிக்கோளத்தில் மாறன் மண்டலம் பரந்திருப்பது,
1. புவியின் மேற்பரப்பிலிருந்து 8 – 16 km வரை
2. புவியின் மேற்பரப்பிலிருந்து 4 - 8 km வரை
3. புவியின் மேற்பரப்பிலிருந்து 16 - 20 km வரை
4. புவியின் மேற்பரப்பிலிருந்து 8 – 20 km வரை
5. புவியின் மேற்பரப்பிலிருந்து 15 – 16 km வரை (.........)

20. பௌதீகப்புவியியலின் உபகூறுகளை காட்டும் விடையை தெரிவு செய்க.
1. காலநிலை, மண், நீர், பாறைகள், குடியிருப்பு
2. பாறைகள், மண், நீர், காலநிலை, விவசாயம்
3. விவசாயம், குடியிருப்பு, கைத்தொழில், தரைத்தோற்றம், மண்
4. தரைத்தோற்றம், பாறைகள், மண், நீர், காலநிலை
5. குடித்தொகை, தரைத்தோற்றம், குடியிருப்பு, கைத்தொழில் (.........)

21. வளிக்கோளத்தில் மேலே செல்லச் செல்ல வெப்பநிலையின் ஏற்படும் குறைவை சரியாக காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
1. ஒவ்வொரு 100 மீற்றருக்கும் $6.4^0C$ இனால் ஆகும்
2. ஒவ்வொரு 1000 மீற்றருக்கும் $6.4^0C$ இனால் ஆகும்
3. ஒவ்வொரு 1000 மீற்றருக்கும் $64^0C$ இனால் ஆகும்
4. ஒவ்வொரு 1000 மீற்றருக்கும் $94^0C$ இனால் ஆகும்
5. ஒவ்வொரு 100 மீற்றருக்கும் $9.4^0C$ இனால் ஆகும் (.........)

22. புவிக்கோளத்தினுள்ளே நீர் பரிமாற்றப்படும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?
1. நீர்மாசடைதல் 2. நீர்மூலம் 3. நீர்பாதுகாப்பு
4. நீரியல் வட்டம் 5. நீர் மேலதிக பாவிப்பு (.........)

23. நெற்செய்கைக்கு மிகச் சிறந்ததும் அத்துடன் மரக்கரிச் செய்கைக்கு மிகவும் பொருத்தமானதுமான மண்வகை எது?
1. செங்கபில நிற மண் 2. செம்மஞ்சள் பொட்போல் மண் 3. ரெகாசோல்ஸ்மன்
4. வண்டல்மண் 5. காரமற்ற கபிலநிற மண் (.........)

24. சிலிக்கன் (Si), அலுமினியம் (Al) மற்றும் மக்னீசியம் (Mg) கலவை அதிகம் அடங்கி இருப்பது.
1. சிமாப்படை மற்றும் மூடி
2. உள்மையும் மற்றும் வெளிமையம்
3. சீயல் மற்றும் சீமாபடை
4. மேல் முடி, சீயல் படை.
5. கீழ் மூடி மற்றும் உள்மையம் (.........)

25. புவியின் மேற்பரப்பிலிருந்த உள்ளே செல்லச்செல்ல
1. வெப்பம் அதிகரிப்பதோடு அமுக்கமும் அதிகரிக்கும்.
2. வெப்பநிலை குறைவதோடு அமுக்கம் அதிகரிக்கும்.
3. பனிப்போர்வை அதிகரிப்பதோடு வெப்பநிலை குறைவடையும்.
4. அமுக்கம் குறைவதோடு வெப்பம் அதிகரிக்கும்.
5. அமுக்கம் குறைவதோடு பனிப்போர்வை குறைவடையும். (.........)

26. கி.பி. 1950 இன் பின்னரான காலப்பகுதியில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி தொடர்பான சரியான கூற்று எது?
1. சனத்தொகை வளர்ச்சி குறைவாக இடம்பெற்றுள்ளது.
2. சனத்தொகை வளர்ச்சி மிக வேகமாக அதிகரித்துள்ளது.
3. சனத்தொகை வளர்ச்சி மாறாமல் இடம்பெறுகிறது.
4. சனத்தொகை வளர்ச்சி தொடராக இடம்பெற்றுள்ளது.
5. மேல் கூறிய எல்லா விடைகளும் சரியானவை. (.........)


27. "அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேவையான உணவைப் பெற்றுக்கொள்ளல்" என்பது எவ்வாறு அழைக்கப்படும்?
1. உணவைப் பெற்றுக்கொள்ளும் திறமை
2. உணவின் அனுகுத்தன்மை
3. உணவின் கிடைப்புத் தன்மை
4. உணவுப் பாதுகாப்பு
5. உணவின் உறுதித்தன்மை (.........)

28. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் 2015 ஆண்டு சனத்தொகை புள்ளிவிபர அறிக்கைப்படி அதிக பிறப்பு வீதத்தைக் கொண்ட அபிவிருத்தியடைந்த இரு நாடுகளைக் காட்டும் விடை எது?
1. ஐக்கிய அமெரிக்கா, பாகிஸ்தான்
2. தென்கொரியா, மொங்கோலியா
3. இந்தியா, ஜப்பான்
4. ஐ. அமெரிக்கா, சிங்கப்பூர்
5. பங்களாதேஷ், உகண்டா (.........)

29. உலகில் தற்போது சனத்தொகை அதிகமாகவுள்ள நாடுகள் நான்கினை முறையாக காட்டும் விடையை தெரிவு செய்க.
1. சீனா, இந்தியா, பிறசீல், நைஜீரியா
2. இந்தோனேசியா, பிறசீல், சீனா, பாக்கிஸ்தான்
3. சீனா, இந்தியா, ஐ. அமெரிக்கா, இந்தோனேசியா
4. சீனா, ஜப்பான், இந்தியா, இந்தோனேசியா
5. இந்தியா, சீனா, பிறசீல், இந்தோனேசியா (.........)

30. நாடொன்றின் சனத்தொகை வளர்ச்சி வேகத்தினை 70 இனால் வகுக்கும் போது பெறப்படும் விடை பின்வருவனவற்றுள் எது?
1. சனத்தொகை இரட்டிப்படைய எடுக்கும் காலம்
2. சனத்தொகை இரட்டிப்படைந்த அளவு
3. சனத்தொகை இயற்கை அதிகரிப்பு வீதம்
4. இடப்பெயர்வு வீதம்
5. தேறிய இடப்பெயர்வு (.........)

31. சனத்தொகையின் சமனான பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் மானிடக் காரணிகளை மட்டும் காட்டும் விடையை தெரிவு செய்க.
1. நகராக்கம், நீர்வசதி, தொடர்பாடல், பொருளாதார நடவடிக்கை
2. காலநிலை, தரைத்தோற்ற வேறுபாடு, இயற்கைவளம், நீர்வசதி
3. காலநிலை, இயற்கைத்தாவரம், தரைத்தோற்றம், மண்
4. பொருளாதார நடவடிக்கை, நகராக்கம், தொடர்பாடல், காலநிலை
5. நகராக்கம், தொடர்பாடல், காலநிலை, அரசியல் நடவடிக்கை (.........)




32. மேலே உலகப்படத்தில் சனத்தொகை ஐதாக காணப்படும் வலயங்கள் இரண்டை காட்டும் விடை பின்வருவனவற்றுள் எது?

1. A, C   2. B, D   3. C, B   4. E, B   5. A, B   (.........)


33. இவ்வுலகப்படத்தில் D மற்றும் E வலயத்திற்கு உரித்தான நாடுகள் இரண்டையும் காட்டும் விடையை தெரிவுசெய்க.
1. இந்தியா, ஜேர்மனி   2. பிரேசில், கனடா   3. பிரான்ஸ், இந்தியா
4. அவுஸ்திரேலியா, சீனா   5. பனாமா, பெல்ஜியம்   (.........)

34. ஆசியாக் கண்டத்திற்குரிய மில்லியன் நகரத்தை மட்டும் கொண்ட விடைத்தொகுதியை தெரிவுசெய்க
1. நிவ்யோக், சிட்னி, லண்டன், பிரான்ஸ்   2. மும்பாய், ரோம், சியோல், கராச்சி
3. பிரேசில், ஜகார்தா, கைரோ, பேக்வேட்   4. டாக்கா, பீஜிங், மும்பாய், டோக்கியோ
5. கேப்டவுன், பெர்லின், வெலிங்டன், மாலே   (.........)

35. உலகின் பிரதான சனத்தொகை அடர்த்தி கூடிய வலயமாக காணப்பட்டு பின்னர் இரண்டாவது சனத்தொகை அடர்த்தி கொண்ட வலயமாக மாறிய வலயம் பின்வருவமனவற்றுள் எது?
1. கிழக்காசியா   2. தென் ஆசியா   3. இலத்தீன் அமெரிக்கா
4. வடமேல் ஐரோப்பா   5. வடகீழ் ஐக்கிய அமெரிக்கா   (.........)


36. சனத்தொகையில் தொடர்ச்சியாக நிகழும் மாற்றங்கள் அதன் அடர்த்தி எனப்படும். சனத்தொகை அடர்த்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை காட்டும் விடை பின்வருவனவற்றுள் எது?
1. பிறப்பு, பிரச்சினையையும், யுத்தமும், இறப்பு   2. இறப்பு, வறுமை, கல்வி
3. இடப்பெயர்வு, இறப்பு, வேலைவாய்ப்பு   4. பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு
5. இறப்பு, வேலைவாய்ப்பு, பிறப்பு   (.........)

37. 2012ஆம் ஆண்டு சனத்தொகை கணிப்பீட்டின் படி இலங்கையின் அதிகுறைந்த சனத்தொகை மற்றும் கூடிய சனத்தொகையைக் கொண்ட மாவட்டங்களை காட்டும் விடைத்தொகுதி பின்வருவனவற்றில் எது?
1. A மற்றும் B   2. E மற்றும் A   3. B மற்றும் D
4. D மற்றும் C   5. C மற்றும் E   (.........)




38. 2013 ஆண்டு இலங்கயின் இறப்பு வீதம் 6.2 ஆகும். இப்பெறுமானத்தை விட மரணப்பெறுமானம் கூடிய இரு மாவட்டங்கள் இவ் இலங்கை படத்தில் எந்த எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளது.
1. A மற்றும் B   2. B மற்றும் C   3. C மற்றும் D
4. D மற்றும் E   5. A மற்றும் E   (.........)

39. வயதடிப்படையிலான சனத்தொகைப் போக்குகளை சனத்தொகை பிரமிட்டுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன. அதன்படி நான்கு பிரமிட்டுகள் படத்தில் காட்டப்பட்டுள்ளன. அவற்றை முறையாக பெயரிட்டால் கிடைக்கும் விடை பின்வருவனவற்றுள் எது?



1. வளரச்சிகட்டம், ஆரம்பக்கட்டம், நிலையான கட்டம், இஸ்திரநிலை
2. இஸ்திரநிலை, நிலையான கட்டம், ஆரம்பகட்டம், வளர்ச்சிகட்டம்.
3. நிலையானகட்டம், இஸ்திரநிலை, ஆரம்பக்கட்டம், வளர்ச்சிக்கட்டம்.
4. ஆரம்பகட்டம், இஸ்திரநிலை, வளர்ச்சி கட்டம், நிலையான கட்டம்
5. ஆரம்பகட்டம், வளர்ச்சி கட்டம், நிலையான தன்மை, இஸ்திரநிலை (.........)

40. சனத்தொகையை வயதடிப்படையில் 0 – 14 வயதுடையோர் குறிப்பிடப்படுவது,
1. வயதுமுதிர்ந்தோர் 2. உழைப்பாளர் 3. இளவயதினர்
4. பாதிக்கப்பட்ட சனத்தொகையினர் 5. பிள்ளைகள் (.........)

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

22 T I

முதலாந் தவணைப் பரீட்சை– தரம் 12 – 2018

**First Term Test - Grade 12 - 2018**

சுட்டெண் : ........................

புவியியல் I
Geography I

- **முதலாம் வினா உட்பட இரு வினாக்களுக்கு விடைதருக.**
- **பகுதி II பகுதி III இலிருந்து ஒவ்வொரு வினாவைத் தெரிவு செய்து மொத்தமான மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

01). அ) தரப்பட்ட 1:50 000 இடவிளக்கப்படத்தை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

i. A சதுரத்தினுள் காணக்கூடிய பண்பாட்டு அம்சங்கள் 6 இனை பெயரிடுக. (பு. 3)

ii. படத்தில் தென் எல்லையிலிருந்து வட எல்லை வரை விரிந்து செல்லும் வீதியின் நீளத்தை கிட்டிய கிலோ மீற்றரில் தருக. ( பு . 2)

iii. படப் பிரதேசம் எத்திசையை நோக்கி சாய்ந்துள்ளது. ( பு . 2)

iv. இப்பபடப்பிரதேசத்தில் காணக்கூடிய பயிர்கள் மூன்றை குறிப்பிடுக. ( பு . 3)

v. A சதுரத்தினுள் காணப்படும் குளம் மற்றும் பிரதான வீதியை இருமடங்காக பெருப்பித்து வரைந்து காட்டுக. ( பு . 4)

vi. பிரதேசத்தின் நீர்வடிகாலமைப்புக்கும் நிலப்பயன்பாட்டுக்கும் இடையிலான தெட்டத்தெளிவாக காணக்கூடிய இலட்சணங்கள் மூன்றை விபரிக்குக. ( பு . 6)

ஆ) தரப்பட்டுள்ள உலகப்படத்தை பயன்படுத்தி பின்வரும் இடங்களை குறித்துக் காட்டுக.


| | | |
|---|---|---|
| i. பஞ்சமாவாவி | ii. ஐக்கிய இராச்சியம் | iii. மெக்சிகோ குடா |
| iv. சஹாரா பாலைவனம் | v. அரபிக்கடல் | vi. பமீர் மேட்டு நிலம் |
| vii. அமேசன் நதி | viii. மடகஸ்கர் | ix. ஜகர்தா |
| x. பெரிய பிரிப்பு மலைத்தொடர் | | |

( பு . 10)

## பகுதி II

02) i. தேசப்படமென்றால் என்ன? ( பு .2)

ii. பிரதான தேசப்படவகைகள் இரண்டும் யாவை? ( பு . 2)





iii. 1:50,000 இடவிளக்கப்படத்தின் மாதிரி ஒன்று இங்கு தரப்பட்டுள்ளது. இங்கு (B) உள் எல்லைக்கோட்டில் காணப்படும் அம்சங்கள் யாவை? ( பு . 3)

iv. வெளி எல்லையின் கீழ் ஓரம் (C) இல் உள்ளடக்கப்படும் பண்பாட்டு அம்சங்கள் நான்கை குறிப்பிடுக. (பு . 3)


v. இடவிளக்கப்படஙளின் பயன்பாடுகள் இரண்டை குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. ( பு . 5)

03). i. கீழே 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்டுள்ள சமவுயரக் கோடுகளுக்கு பொருத்தமான குறுக்கு வெட்டுமுகங்கள் A - F வரையா எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளது. அவற்றை சரியாக பொருத்தினால் வரும் விடைகளை எழுதுக. ( பு . 6)

சமவுயரக்கோடுகள் குறுக்குவெட்டுமுகம்




ii. கீழே காணப்படும் சமவுயரக்கோடுகள் குறிக்கும் அம்சங்கள் A - F வரை காட்டப்பட்டுள்ளது. இவற்றிற்கு பொருத்தமான தரைத்தோற்ற அம்சங்களை ஆங்கில எழுத்துக்களுடன் எதிரே எழுதுக. ( பு . 6)




ii. இடவிளக்கப்படங்களில் பயன்படுத்தப்படும் பின்வரும் அம்சங்களுக்கு பொருத்தமான குறியீட்டை சரயான நிரங்களுடனும் வரைந்து காட்டுக.

- மாகாண எல்லை - புகையிரத பாதை - நீர்பாசணக்கால்வாய்
- நீதிமன்றம் - நடைபாதை - தேயிலை தோட்டம் ( பு .3)

## பகுதி III

04) i. படவரைகலையில் பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்கள் மூன்றை பெயரிடுக. ( பு . 3)

ii. நவீன படவரை கலை முறையின் பொதுப்பண்புகள் மூன்றை குறிப்பிடுக. ( பு . 3)

iii. மேலே (i) இனால் குறிப்பிடப்பட்ட நுட்பமுறைகளுள் ஏதாவது ஒன்றினை விளக்குக. ( பு . 2)

iv. நவீன படவரைகலையில் பயன்படுத்தப்படும் உள்ளீட்டு வெளியீட்டு மூலங்கள் சிலவற்றின் படங்கள் A – D என்ற எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளன. ( பு . 2)

a. அவற்றைப் பெயரிடுக ( பு . 2)

b. அவற்றில் ஏதாவது இரு உள்ளீட்டு மூலகங்களை தெரிவுசெய்து தேசப்பட விஞ்ஞானத்தில் அது எவ்வாறு பயன்படுகின்றது என்பதை விபரிக்குக. ( பு . 3)



A B C D

05). i. தற்காலத்தில் நவீன படவரைகலை முறைமை பிரபல்யம் அடைந்தமைக்கு சாதகமான காரணிகள் மூன்றை குறிப்பிடுக. ( பு .3)

ii. பின்வரும் தரவுகள் புவியியல் தகவல் முறைமையில் பயன்படுத்தப்படும் தரவுகள் சிலவாகும்.

| | | |
|---|---|---|
| - வீட்டின் தன்மை | - அகலாங்கு | - நதியின் நீளம் |
| - நெட்டாங்கு சாய்வு | - பயர்நிலத்தின் பரப்பளவு | - நீர்பாசன கால்வாய் |
| - மின்னோட்டத்தின் அளவு | - இடவுயரம் | - தேசிய ஆள்கூறு |

இத்தரவுகளை புவியியல் தகவல் முறைமையில் பயன்படுத்தப்படும் பிரதான தரவு வகைகள் இரண்டுக்கும் அமைய வகைப்படுத்திக் காட்டுக. ( பு . 6)

iii. இடவிளக்கப்படங்களுக்கும், GIS படங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகன் மூன்றினை விபரிக்குக. ( பு .6)

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் Provincial Department of Education NWP

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

| 22 | T | II |
|---|---|---|

## முதலாந் தவணைப் பரீட்சை— தரம் 12 – 2018
## First Term Test - Grade 12 - 2018

சுட்டெண் : ........................ புவியியல் II Geography II காலம் : 3 மணி

**அறிவுறுத்தல்கள்.**

- **இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது.**
- **ஒரு பகுதியிலிருந்து குறைந்தது 2 வினாக்களையேனும் தெரிவு செய்து மொத்தம் 5 வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I – பௌதீகப் புவியியல்

01). 1. தொகுதி என்பதென்ன? சுருக்கமாக விபரிக்குக. (பு. 2)


2. தொகுதியின் சக்தி மற்றும் பதார்த்தங்களை பரிமாறிக் கொள்ளும் வித்ததுக்கமைய மூன்று வகைப்படுத்தப்படுகின்றன. அவற்றை குறிப்பிட்டு ஒவ்வொரு உதாரணம் தருக. (பு . 6)

3. புவித்தொகுதியின் பிரதான உபதொகுதிகளை பெயரிட்டு அதில் ஏதாவது ஒரு தொகுதியை சுருக்கமாக விபரிக்குக. (பு . 6)

4. புவித்தொகுதியின் பிரதான உபதொகுதிகளுக்கிடையே பிணைப்பு காணப்படுகின்றது என்பதை உதாரணம் தந்து விளக்குக. (பு . 6)

02). 1. பாறைகள் என்பதென்ன? (பு . 3)

2. பாறைகளை பிறப்பு மற்றும் மரபின் அடிப்படையில் பிரிக்கப்படும் முறையை காட்டும் பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக.





(பு . 5)

3. மண் உருவாக்கக் காரணிகள் மூன்றை விபரிக்குக. (பு . 6)

4. மண் பாதுகாப்பின் முக்கியத்துவதத்தை மூன்று காரணிகளை கூறி விளக்குக. (பு . 6)


03). கனிய உற்பத்தியின் நோக்கம் மற்றும் இயல்பிற்கேற்ப கனியங்கள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்படுகின்றது,

1. ஒவ்வொரு பிரிவுக்கும் இவ்விரு உதாரணங்களை குறிப்பிடுக. (பு . 6)
2. இலங்கையில் காணப்படும் பின்வரும் கனியங்கள் பரவியுள்ள பிரதேசங்கள் இலங்கைப்படத்தில் ஆங்கில எழுத்தால் காட்டப்பட்டுள்ளது அவற்றை இனங்கண்டு எதிரே எழுதுக.
   - i. அபடைட்
   - ii. கயோலின்
   - iii. இரும்புத்தாது (மெங்கனைட்)
   - iv. கனியமணல் (பு. 4)




3. மேலே குறிப்பிட்ட கனியங்களின் பொருளாதார முக்கியத்துவத்தை மூன்று காரணிகளை காட்டி விளக்குக. (பு . 5)
4. கனிய உற்பத்தியின் போதோ அல்லது பாவனையின் போதோ ஏற்படக்கூடிய பிரச்சினைகள் மூன்றை குறிப்பிட்டு அப்பிரச்சினைகளை இழிவளவாக்கிக் கொள்ள எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை சுருக்கமாக விபரிக்குக. (பு . 5)

04). புவியின் குறுக்கு வெட்டு முகப்படமொன்று இங்கு தரப்பட்டுள்ளது. அதன்படி




1. XYZ என்பவற்றால் காட்டப்படும் படையை பெயரிடுக. (பு . 3)
2. நீர் பெயரிட்ட படைகளின் ஒன்றின் பண்புகள் மூன்றை விபரிக்குக. (பு . 6)
3. படத்தில் A மற்றும் B என்பவற்றால் காட்டப்படும் படையையும் C மற்றம் D இனால் காட்டப்படும் பிரிக்கும் எல்லைகளையும் பெயரிட்டு சுருக்கமாக விபரிக்குக. (பு . 6)
4. புவியோட்டில் நிகழக்கூடிய பௌதிக தாக்கங்கள் இரண்டினை சுருக்கமாக விபரிக்குக. (பு . 5)

## பகுதி II - மானிடப்புவியியல்

05) **உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடுகள் (2015 மற்றும் 2050) 015 நாடு**


| 2015 - நாடு | சனத்தொகை மில்லியன் | 2050 - நாடு | சனத்தொகை மில்லியன் |
|---|---|---|---|
| சீனா | 1372 | இந்தியா | 1660 |
| இந்தியா | 1314 | சீனா | 1366 |
| ஐ. அமெரிக்கா | 321 | ஐ. அமெரிக்கா | 398 |
| இந்தோனேசியா | 256 | நைஜீரியா | 397 |
| பிறேசில் | 205 | இந்தோனேசியா | 366 |
| பாகிஸ்தான் | 199 | பாகிஸ்தான் | 344 |
| நைஜீரியா | 182 | பிறேசில் | 226 |
| பங்களாதேஷ் | 160 | பங்களாதேஷ் | 202 |
| ரஷ்யா | 144 | கொங்கோ குடியரசு | 194 |
| மெக்சிகோ | 127 | எதியோப்பியா | 165 |

மூலாதாரம்: **www.wikipedia.org**

1. மேலே உள்ள அட்டவணையின் பிரகாரம் உலக சனத்தொகை தொடர்பாக காணக்கூடிய பிரதான பண்புகள் நான்கை குறிப்பிடுக. (பு . 4)
2. கீழே காணப்படும் சனத்தொகை செறிவுமிக்க வலயங்கள் நான்கிற்கும் உரித்தான நாடுகள் இவ்விரண்டை குறிப்பிடுக.
   i. கிழக்கு ஆசியா, ii. தென் ஆசியா, iii. தென் கிழக்கு ஆசியா, iv. ஐரோப்பா (பு . 4)
3. உலகின் சமனற்ற சனத்தொகை பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் பௌதீக மானிடக்காரணிகள் மூன்றை உதாரணத்துடன் விளக்குக. (பு . 6)
4. சனத்தொகையுடன் தொடர்புடைய பிரச்சினைகள் மூன்றை விபரிக்குக. (பு . 6)

06). 1. சனத்தொகை பிரமிட் என்பது யாது விபரிக்குக. (பு . 2)

2. கீழே A,B,C,D இனால் பிரதான சனத்தொகை பிரமிட் நான்கு காட்டப்பட்டுள்ளன. அவற்றைப் பெயரிட்டு அதற்குரிய நாடுகள் இரண்டு வீதம் குறிப்பிடுக. (பு . 6)



A B C D

3. ஆரம்ப கட்ட பிரமிட் வடிவ சனத்தொகை கொண்ட நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்றை விபரிக்குக. (பு . 6)

4. இலங்கயின் ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரிப்பதற்கான காரணங்கள் மூன்றை சுருக்கமாக விபரிக்குக. (பு . 6)

07). 1. இலங்கையின் சனத்தொகை அடர்த்தியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் மூன்றை குறிப்பிடுக. (பு . 3)

2. இலங்கையில் பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் மூன்றை சுருக்கமாக விபரிக்குக. (பு . 6)

3. இலங்கையில் சனத்தொகை பரம்பியுள்ள பாங்கை சுருக்கமாக விபரிக்குக. (பு . 6)

4. சனத்தொகையின் இடப்பெயர்வு காரணமாக ஏற்படும் பாதக விளைவுகள் மூன்றை விபரிக்குக. (பு . 6)

08). **இலங்கையின் சனத்தொகை வளரச்சிப் பரம்பல் - 1981 - 2011**

| மாவட்டம் | வருட வளர்ச்சி வேகம் (%) |
|---|---|
| அநுரதபுரம் | 1.33 |
| ஹம்பாந்தோட்டை | 1.17 |
| மொனராகலை | 1.15 |
| பொலொன்னருவ | 1.11 |
| குருனாகல் | 0.93 |
| அம்பாறை | 0.81 |
| புத்தளம் | 0.66 |
| களுத்துறை | 1.23 |
| கம்பஹா | 1.02 |
| நுவரெலியா | 0.05 |
| பதுளை | 0.39 |

1. மேல் உள்ள அட்டவணைப்படி சனத்தொகையின் வருட வளர்ச்சி வேகம் கூடிய குறைந்த இவ்விரு மாவட்டங்களை பெயரிடுக. (பு . 2)

2. இலங்கையின் சனத்தொகையின் சமனற்ற பரம்பலுக்கான காரணங்கள் மூன்றை விபரிக்குக (பு . 6)

3. களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் சனத்தொகை வேகமாக வளர்ச்சியடையவதற்கான காரணங்கள் இரண்டை சுருக்கமாக விபரிக்குக. (பு . 6)

4. வரண்டவலய சனத்தொகை வளர்ச்சி வேகம் ஈரவலய சனத்தொகை வளர்ச்சி வேகத்தைவிட அதிகமாக இருப்பதற்கான காரணங்கள் மூன்றை விபரிக்குக. (பு . 6)

# முதலாம் தவணைப் பரீட்சை - 2018
# புவியியல்- I Geography I
### தரம் -12 -விடைகள்

## பகுதி -I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | i | 11) | i | 21) | ii | 31) | iv |
| 2) | ii | 12) | iii | 22) | iv | 32) | i |
| 3) | i | 13) | ii | 23) | iv | 33) | iii |
| 4) | v | 14) | iv | 24) | iii | 34) | iv |
| 5) | iv | 15) | iv | 25) | i | 35) | v |
| 6) | v | 16) | iii | 26) | ii | 36) | iv |
| 7) | ii | 17) | v | 27) | v | 37) | ii |
| 8) | i | 18) | i | 28) | iv | 38) | i |
| 9) | ii | 19) | i | 29) | iii | 39) | v |
| 10) | iv | 20) | i | 30) | i | 40) | iii |

சரியான விடைக்கு 2 புள்ளி வீதம் 80 புள்ளிகள்)

## பகுதி I

01. 1. பாடசாலை, பௌத்தவிகாரை, ..... பிரதேச செயலாளர் பிரிவு, பொலிஸ், குளம், வயல், வீட்டுத்தோட்டம்.
2. 142 km ( 28.4 $C^0$)
3. தெற்கிலிருந்து வடக்கு திசை நோக்கி
4. நெல்வயல், வீட்டுத்தோட்டமை, வேறுபயிர்
5. நீளம் 8.4 அகலம் 8 செ.மீ சதுரத்தினுள் சரியாக வரைந்து காட்டல்.
6. நெல்வயல், குளம் மற்றும் நதிக்கு அண்மையில் காணப்படுகிறது. இடையிடையே காணப்படும் உயர் நிலங்களிளை அண்டி காடுகளும், தார் பிரதேசங்களில் நெல்வயல்களும் காணப்டுகிறது.
வரண்ட பகுதிகளில் குளங்கள் பரிவியுள்ளன.
ஒவ்வொரு குளங்களுக்கும் அண்டையிலும் காடுகள் காணப்படுகின்றன.

02. 1. வெளியில் இருந்து பார்க்கும் போது தென்படும் புவியின் அமைப்பினைக் காட்டும் சித்திரப்படம்
2. i. கருப்பொருட் படங்கள் ii. இடவிளக்கவியல் படங்கள்
3. அகலாங்கு, நெட்டாங்கு, தேசிய ஆள்கூறு
4. நிர்வாக எல்லைகள், வீதிகள், குடியிருப்புகள், பயிரிடப்பட்ட நிலங்கள் அரசாங்க கட்டடங்கள் (ஏதாவது 4)
5. குறியீடுகளை வரைந்து பொருத்தமான நிரந்தீட்டப்பட்டு இருந்தால் புள்ளி வழங்குக.
6. பிரதேசத்தின் தரைத்தோற்றத்தின் இடரீதியாக பரம்பலை வாசிக்க முடிதல்
   - ஏதாவது ஓரியடத்தின் ஒப்பீட்டளவு அல்லது சார்பு அமை சரியாக வெளிக்காட்ட கூடியதாக இருத்தல்.
   - தரைத்தோற்றங்களக்கிடையில் தொடர்புகளை தெளிவாக விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.
   - நாட்டின் அல்லது பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் செயற்பாடுகளை தயாரிக்க பயன்படும்.

## பகுதி II
### பௌதீகப் புவியியல்

01. 1. பிரிவுகள் பலவற்றினை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திக் குறிப்பிட்ட வரையறைகளுடன் செயற்படகின்ற ஒரு அம்சமாகும்.
2. தனித்த தொகுதி : - உ-ம் ஞாயிற்றுத் தொகுதி
மூடிய தொகுதி : - உ –ம் புவித்தொகுதி
திறந்த தொகுதி :- உ –ம் சூழல் தொகுதி
3. கற்கோளத் தொகுதி – நீர் கோளத்தொகுதி – வளிக்கோளத்தொகுதி – உயிர்கோளத்தொகுதி
ஒவ்வொரு தொகுதி பற்றியும் விளக்குதல்.
4. வளிக்கோளம். நிரக்கோளம், உயிரிகோளம், புவிக்கோளங்களுக்கிடையிலான தொடர்பை வரைபடத்தை பயன்படத்தி விளக்குதல்.

02. 1. அசேதனப் பொருட்களால் ஆன கனிமங்களாலும் சேதனப்பொருட்கள் உருமாற்றம் பெறுவதாலும் பாறைகள் உருவாகின்றன. (புள்ளி 3)
2. i. தீப்பாறை ii. அடையற்பாறை iii. தலையிட்டுப்பாறை iv. சேதன முறை அடையற்பாறை v. இடைமூலப்பாறை (5 புள்ளி)
3. தாய்பாறை, காலநிலை, தரைத்தோற்றம், காலம் தாவர மற்றும் விலங்கினங்கள், நீர்வடிகாலமைப்பு போன்ற மண் உருவாக்கக் காரணிகள் ஏதாவது மூன்றை பற்றி விபரித்தல் (5 புள்ளி)
4. மண்ணின் தரத்தை பேணுதல் - நீர்வளத்தை பாதுகாத்தல் - இயற்கை இடர்களை தவிர்த்துக கொள்ளல் போன்ற காரணிகளை விளக்குதல். (6 புள்ளி)

03. 1. i. எரிபொருள் கனியம் : - தோரினைட். மொனசைட், பீட்
ii. உலோக கனியம் :- இரும்பு, செப்பு, மக்னீசியம், நிக்கல்
iii. உலோகமற்ற கனியம் :- மணல், களி, மணற்கல், மாணிக்கம், காரியம்
2. அயடைட் C எப்பாவல சயோலின் D பொரலஸ்கமுக பெங்கனைட் B விலகெதர
இல்மனைட் A புல்மோட்டை
3. தேசிய வருமானம் அதிகரிக்கும் பிரதேச அபிவிருத்தி வாழ்க்கைத்தரம் உயரும்
4. சூழல் மாசடைதல்
வளிமாசடைதல், மன்சரிவு, சுகாதாரப் பிரச்சினைகள் மூன்றை குறிப்பிட்டு அதனை இழிவளவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை விபரித்தல்.

04.. 1. X மேல் மூடி Y வெளிமையம் Z உள்04 1மையம்
2. ஏதாவதொன்றின் பண்பினை விபரித்தால் புள்ளி வழங்குக.
3. A சீயல் படை B – சீமாபடை C – மொஹோரோவிச் இடைவெளி
D - கூற்றன் பெக் இடைவெளி
4. நிலநடுக்கம், சுனாமி, மண்ணரிப்பு
i. 1 –B, 2 – E, 3 – D, 4 – C, 5 – F, 56 – A
ii. A பள்ளத்தாக்கு B – கணவாய் C. திருகோண கணிதநிலையம் D –
E. சுவடு F.....
iii. பொருத்தமான குறியீடுகளும், நிரல்கள் பயன்படுத்தப்பட்டிருத்தல்.
4. 1. புவியியல் தகவல் முறைமை GIS
பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை GPS
தொலையுணர்வு தொழில்நுட்பம் Rs.
2. வளர்ச்சியடைந் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் தொடர்பாடல் உபகரணங்கள் ஊடாக உருவிக்கப்படுகின்ற பல்வேறு தகவல்கள் உள்ளடக்கப்படல்.

- பூகோளமயமாதல் மற்றும் தேசியமயமாதல் மூலம் மிகச்சரியான அமைவிடத்தை காட்டமுடியுமாதல்.
- படமாக்கப்பட்ட இடம் சார் தகவல்கள் உண்மையான நீளம், அகலம், உயரம் ஆகிய பரிமானங்களை சரியாக இனங்காண முடிதல்.
- இலகுவில் கிற்றைப்படுத்தலாம்
- களஞ்சியப்படுத்தல், பயன்படுத்தல் எடுத்துச் செல்ல இயலுமாக காணப்படல்

3. ஏதாவது ஒரு நுட்பமுறை (GIS/GPS/Rs) விளக்குக.
4. a) A விசைப்பலகை B. வருடிகள் (Scanner) C. திரை (monitor) D. அச்சு உபகரணம் (Peinter)
b) இவ்வுபகரணங்கள் ஏதாவது ஒன்றின் பயன்பாடு பற்றி விளக்குதல்.

## மானிடப்புவியியல்


05. 1. அட்டவணையைப் பார்த்து பொருத்தமான விடை எழுதி இருப்பின் புள்ளி வழங்குக.
2. சரியான விடைக்கு புள்ளி வழங்குக.
3. பௌதிககாரணி : - காலநிலை, தரைத்தோற்றவேறுபாடுகள், நீர்வசதி, மண், இயற்கை வளம், இயற்கைத் தாவரப்பரம்பல்
மானிடக்காரணி :- வியாபாரம் மற்றும் நகராக்கம் தொடர்பாடல் அரசியல் காரணிகள்
4. i. சனத்தொகை வயோதிபமடைதல் ii. விஷேட தேவையுடையோர்
iii. ஆண், பெண் சமூகநிலை iv. வறுமை போன்ற காரணிகளை விளக்குதல்.
5. i. வேகமானது, சரியானது. இற்றைப்படுத்தக் கூடியது. நவீன தொழில் நுட்பம் உட்படுத்தப்பட்டிருத்தல்
ii. இடம்சார் தரவு,: நெட்டாங்கு, வீட்டின் அமைவிட் தேசிய ஆள்கூறு அகலாங்கு
இடம்சார்த்தரவு : நதியின் நீளம், பயிர்நிலங்களின் பரப்பளவு, மின்னோட்டத்தின் அளவு, படைவுயரம்.
iii. இடவிளக்கப்படத்திற்கும், நவீன படைவரை கலைக்கும் இடையிலான வேறுபாட்டை எழுதுக.

06. i. வயது தொகுதிக்கேற்ப சனத்தொகை கட்டமைப்பு தொடர்பாக காட்டும் சனத்தொகை பிரமிட் ஆகும்.
ii. A ஆரம்ப கட்டம் - நஜைரீயா, பாகிஸ்தான் B – வளர்ச்சிக்கட்டம், இந்தியா
C – நிலையான கட்டம், ஐக்கிய அமெரிக்கா, நோர்வே D - இஸ்திர நிலை, யப்பான், அவுஸ்திரேலியா
iii. பிறப்பு வீதம் அதிகம், மரண வீதம் அதிகம், ஆயுள் எதிர்பார்ப்பு குறைவு.
iv. மருத்துவ சுகாதார வசதி அதிகம், போசாக்கான உணவு, கல்விஅறிவு, சிறந்த உணவுப்பழக்கவழக்கம்.

07. i. பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு
ii. பெண்களின் உயர்கல்வி, வேலைவாய்ப்பில் ஈடுபடல், திருமணவயதெல்லை பிற்போடப்படல்.
iii. மொத்த சனத்தொகையில் 287 மேல் மாகாணத்தில் வாழ்தல் நாட்டின் மொத்த சனத்தொகையில் 22.6% கொழும்பு கம்பஹா மாவட்டங்களில் அதிகரித்தல்
முல்லைத்தீவு மாவட்டத்தில் குறைந்த சனத்தொகை காணப்படல்.
iv. மூளைசாரிகளின் வெளியேற்றம், உழைப்பு வெளியேற்றம், கல்விநிலை பாதிப்படையும்.

08. (1) அதிகம்: களுத்துறை அநுராதபுரம் குறைவு : நுவரெலியா, பதுளை (புள்ளி 4)
(ii) பௌதீக மானிட காரணிகளுக்கு புள்ளி வழங்குக. (புள்ளி 6)
(iii) அடிப்படை வசதிகளில் விருத்தி, பிரதேச அபிவிருத்தி போன்ற காரணிகள். (புள்ளி 4)

(iv) இடப்பெயர்வு, குளங்களின் புணரமைப்பு, கிராமப் புரங்களில் மின்சார வசதி அதிகரிப்பு, விவசாய நடவடிக்கைகள்
(புள்ளி 6)



# LOL.lk BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින් නිවසටම ගෙන්වා ගන්න





| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර, කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**